பிஸ்மில்லா கிர்ரகுமானிர்ரகீம்

பதுர் காட்சிப் பதம்.

OF THE REGISTRA... MADRAS

இஃது

வத்தலகுண்டு சித்தூர்

கனம் சய்யது புலவர் குமாரர்

இலக்கியம், இலக்கணம், மிகுராசுநாமா, ராசநாயகம்,
குணங்குடியார், சீரா, கம்ப ராமாயணம், பாரதம்,
திருவிளையாடல், பெரியபுராணம் முதலிய

பிரசங்க வித்துவான்

காதிருமுகம்மது புலவர்

இயற்றியது.

பல நகரங்களிலும் வசிக்கின்ற
தீனோர்கள் பொருளுதவி வேண்டுகோளின்படி
இந்நூல் ஆசிரியரால்
மதுரை விவேகாநந்தா பிரஸில்
அச்சிடப்பெற்றது.

2]   1934   [ரிஜிஸ்தர் செய்தது

O7:446
N34,
12794,

பதுர்காட்சிப் பதம்.

காப்பு விருத்தம்.

முந்தியா னின்னுனின்னப் பொருளென முடிவுந்தோன்ரு
பிந்தியா னின்னுனின்ன பொருளென பிரவுங்காணு
சிந்தியா னின்றசீவ ருடலுயிர் சிறந்து வாழ
உந்தியி லுணவுதந்தா ளொருவனை வணங்குவாமே.

சந்த விருத்தம்.

ஆதி யொன்றும் அழிவிலா ரப்பினை
சோதி யொன்றுஞ் சுடரிர சூலினை
வாதி யொன்றும் வருநாக மென
நீதியொன்றுங் குரான்சொல் நினைவனே.

விருத்தம்.

அலிபொன்றே ரகுமானென்றே ஆகிய உயிர்க ளொன்றே
அலிபொன்றே அகும்மதொன்றே ஆகிய தொழுகை யொன்றே
அலிபொன்றே ரகுமானென்றே ஆயிர நாம மொன்றே
அலிபொன்றே அகும்மதொன்றே ஆயிர மில்லை யொன்றே

மகம்மதியர் குலத்தில் மாணிக்கமாய்விளங்கும்— என்ற மெட்டு

கலப்பற்றதாத்தில்நின்று கதிர்வடிவாயமைந்த
கபிபாமிரசூல் வள்ளலே—நபியுரைத்த
கலிமாயாவருங் கொள்ளலே

முடுகு

கலமெழு துவதென காட்டி வேதம் முழுதும்
உலகுயி ரெவைகளு முணர்வது முகம்மதை
கருதித் தொழுத வர்க்குமே—கஸ்த்தூரிவாடை
கமழுஞ் சொர்க்கத் தெவர்க்குமே 1

தவ்ராத்து சபூரின்சில் சாற்றுந்த லீல்களெல்லாம்
சரதங் குரானைப் பத்தியே—சதாகாலமும்
சாகீது சொல்லும் புத்தியே

முடுகு

தவ்கீத் தவங்களையுந் தருவது சலவாத்து
யெவ்வுயி ரெவைகளு மேற்றி வணங்கிட
தனியோன் தொழுகை பெற்றவர்—தவாபி லுயர்ந்து
தானே சொர்க்கத்தைப் பெற்றவர் 2

கலிமாத் தொழுகை நோம்பு சக்காத்து ஹஜ்ஜுயென்று
களருமீ மானைத் துறந்து—நரகில்வெந்து
கதருங்கோ மானை மறந்து

முடுகு

கலை அருஉருவமும் காட்டியோ ரிணை துணை
மனைவியார் தாய்பிதா மகவிலை தமரென
கடவுளொருவ னென்றவன்—கலிமாப்பொருளை
கண்டு கொண்டவ னென்றவன் 3

வட்டி கள்க்குடி சிறுக்களவுபொய் கொலைகராம்
வகுத்தான் குரானில் ரகுமான்—மீசானிருத்து
மதிக்கும் மகுசர் பெருமான்

முடுகு

வட்ட மதிமுகமும் வார்ந்து கருணைபொழி
திட்டியும் மரைமலர் திருவல்லி வாய்மலர்
வானில்மே கக்குடையுமே--வள்ளலிரசூல்
வசனங் குரானடையுமே 4

ஞானத் துரியாதீதம் காபகவ் சையினி
கருதும லிக்கில் குத்தூசீ—மிகுராசுபோய்
கழருமதீது குத்தூசி

முடுகு

கண்ணக னுலகினில் காட்டிய காரணம்
அண்ணல் முகம்மது யாருமறிந்திட
கற்பகக் கையுங்கமலம்—கபீபுமுகம்மது
கருதும் பாதமுங் கமலம் 5

றூகுபிரியக் கபூர் நெருக்கிமுன் கர்நக்கீர்
நோக்கியா ரென்று பார்க்கவே—கலிமாப்பொருள்
வாக்கி னுதிக்குங் கார்க்கவே

முடுகு

நுண்ணறி வெவைகளும் நோக்கு முகம்மது
நன்னெறி நற்புகழ் நாட்டிய தீநிலை
நுவலும் யேவல் விலகலை—நோக்குவோரெல்லாம்
நூராய்மெய வல்விலகலை 6

தூலசூக்கும சூட்ச காரணச் சடலத்தில்
தோன்றும் நபுசைவிலக்கு—நபிபெருமான்
சொன்ன தாத்தையுந் துலக்கு

முடுகு

தூதுவ ரெவரினுந் தோன்றிய திருநபி
ஆதியில் அகும்மது ஆகிரில் முகம்மது

தூயவன் ரூளர்நாமமே—தொளாயிரத்தொன்னூற்
றெருன்பது தூயநாமமே 7

மூவ்வாயி ரவருடம் நடந்தாலுந் தொலையாத
முஸ்த்தகீ மென்னும் பாலமே—இஸ்ஸாத்தொழுகை
முன்சென்ற தாகுங்காலமே

முடுகு

முகம்மது முஸ்த்தபா மூர்த்தி யொளிவால்
சகம்முத லுயிருஞ் சகலமு மென்ருல்
முந்திப் பெருமை யுற்றதார்—முகம்மதுவொளிவால்
பிந்திச்சிருமை யுற்றதார் 8

மலக்கு மனுக்கள் ஜின்கள் மாநபி மார்கள்முதல்
மகுசர்நிலை நிறுத்தியே—சொர்க்கம்நரகம்
வழங்கும் மீசாநிறுத்தியே

முடுகு

கமல மலர்வதனம் கார்முகில் குடையிட
நிமல மலர்க்கரம் நிர்மல சொரூபமும்
கடத்தாய் ரகுமத் தென்றும்மே—இருகாமதையேந்தி
கார்ப்பா யென்னும்மத் தென்றமே 9

பள்ளியில் முசாபரை பார்த்துத் தொழுதவர்கள்
பாராமல் வீடுசெல்லவே—பயகாபர்நபி
பகிலிசபா யத்தல்லவே

முடுகு

பைத்துல் முக்கத்தீசில் பாடுறுகேள்வியில்
வைத்திடு மீசான் வலப்புரம் நன்மையே
பாரமாய்ச் செய்து கார்த்தும்மே—மூமினோர்களையெல்லாம்
பச்சமாய் சொர்க்கம் சேர்த்தும்மே 10

வாங்குச் சத்தத்தைக் கேட்டு வந்து தொழுதில்லாத
மனிதாயிசுலா மல்லவோ—முதலாளியென்ற
வாழ்வை யிசுலாஞ் சொல்லவோ

முடுகு

வான்மறை சிறகெலாம் வானெடு ஜிபிரியில்
தானவன் திருவகி தான்வரு வரவெலாம்
வாங்கித் திரட்டுங் குரானே—ஆதமக்களின்பாவம்
நீங்கித் தெருட்டும் பிரானே 11

சுத்தசை தன்யமான சுழிமுனை நடுவான
சுருதிமறை முகம்மது—தலீலைப்பாடி
துலக்கும் காதிர் முகம்மது

முடுகு

சுன்னத்து யெவைகளும் சூட்டி முகம்மது
ஜன்னத்துஆள சரிகத்து னின்றிடு
சுத்தப் பிரமத்தின் வடிவே—முகம்மது இரசூல்
சூரத்து ஞானமுடிவே 12

கடம்பகந்தன் சேவைமகத்துவ—என்ற மெட்டு

மணமல் லிகைகமழ் மேனிமகுத்துவ
வந்தாட் கொண்டருள் புரிஇரசூல்
மங்களத்திரு முகம்மதே—நற்குறசிகட்கரசே
மங்களத் திருமுகம்மதே

முடுகு

ஜீவ ரட்சகராகி ஆமினு சேயெனுந்திருமேவி மாறை
தீனுவி சுலா மாக்கியே—மிகுராசிலேந்து
நேரந் தொழுகை யாக்கியே 1

இருத்தி ஐம்புலனை ஒதிடுங் கலிமா எழுபத் தய்யாயிரம்
யிப்பச் சொன்னாலுஞ் சொர்க்கமே—நபிகலிமாவை
யெப்பச்சொன்னாலுஞ் சொர்க்கமே

முடுகு

சாமு நகரா சாளுங் கபீர சேனையதிபதி யாருமறிந்திட
சாற்றும் மதியை யழைத்து—கலிமாவுரைத்து
தசையைப் பெண்ணாக்கி முடித்து 2

அருள்தரும் ஹக்கன் தீநிலையிசுலாம்
அவாவுக ளற்றுநிற்மல முற்று
அல்லாகுத் தாலாவைநம்பு—எப்பொருள்களும்வம்பு
அல்லாகுத் தாலாவை நம்பு

முடுகு

ஆதி அருமறை ஒதுகிராமலே மீது ஜிபிரியில் நீதிநபியென
இக்குறகு வென்னுஞ் சூராவே—மாலம்யகுலம்
யென்னும் மட்டோ திப்பேராவே 3

சமரசமென்று தேருதல்பண்ணு தாறுல் பக்காவது நண்ணு
சலவாத்து நற்பதம் பண்ணு—ஹாசீம் முகம்மதை யெண்ணு
சலவாத்து நற்பதம் பண்ணு

முடுகு

நாடிப் பதுரினில் தேடிகுபிரர்கள்
ஓடிமாண்டிட சோடி யிருகரம்
எந்தித்துவா விரந்துமே—ஒருபிடிமண்
எடுத்து யெறிந் தவிந்தும்மே 4

பருலது வென்னும் பாருலகத்தா ரீமான்கொள்வது நிலைசதமே

பாவம் தவ்பாவில் நீங்கும்மே—பகில்க்குணம் விடும்மே
பாவம் தவ்பாவில் நீங்கும்மே

முடுகு

காதம் பரிமளம் பாதம் தரைபடா
வேதம் விளங்கிட போதங் குடையிட
கபூகாவின் கஸ்டதுன்பமே—கலிமாவுரைத்து
காணு மொளிவி லின்பமே 5

சத்துசித் தானந்த நன்னிலை தந்தாத ரித்திடுங் கலிமா
சக்காத்து தொழுகை நோம்புமாம்
சொர்க்கப் பொருள்களுந் தருமாம்—சக்காத்து
தொழுகை நோம்புமாம்

முடுகு

சாமுநகருறை வார்க ளொருமனை
நேருமுமையழை வாரும் வதைபுரி
நினைத்து அழைத்த கல்லும்மே—காமொடித்து
மறுத்தும் அளித்த சொல்லும்மே 6

மழைய ருள்புரியும் மேகக் குடைநிழல்
தீன்தீன் முகம்மது வசனம்
மாநிலத்தார்க்கு சாஸ்பதம்—தொழுங்கலி மாபதம்
மாநிலத் தார்க்கு சாஸ்பதம்

முடுகு.

ஆசுதா னரசாக்கி அபுசக லேகுபாதையி லெதிர்ந்தபா லையில்
அக்கினிசுட்டு நொந்தும்மே—யாவரும்வேண்ட
அழைத்து நதியைத் தந்தும்மே 7

உலுவொடு தொழுதல் தேகசவுக்கியத்
துபயோகம் சொர்க்கமும் வாழ்வு
முண்டாகும் நாயன் நாட்டமும்—குரானோதிடு முடிவும்
உண்டாகும் நாயன்நாட்டமும்

முடுகு

ஊதிடுஞ்சூரி லுலகமழிய
மாவுல்கயாத்து மழையருள் புரிய
உதிக்கு முடலு முயிருங் கபூரில் நின்று
மதிக்கும் மகுசர் வெளியும் 8

அறியுங்கண் மெய் வாய் செவி நாசி
அவித்து பிர்மானந்தங்கொண் டறிவைநிலை
நிலைநிறுத்துமே—தீக்கிரல்லாஹுக்கே
அறிவை நிலை நிறுத்தும்மே

முடுகு

மண்ணினால் மனையும் பொன்னினால் பொருளும்

உன்னினுறவும் மகுசரில் வரமாட்டதே
நீ செய்யு மமல் வாராமல் போக மாட்டாதே
நீ செய்யு மமல் வாராமல் போக மாட்டாதே 9

முந்தி அகும்மது பிந்திமுகம்மது செந்தாமரை மலர்வதனம்
மொழியும் வாய் செவ்வல்லி புட்பம்—உவமையும் மாகா
முச்சுட ரென்றதே நுட்பம்—உவமையும் மாகா
முச்சுட ரென்றதே நுட்பம்

முடுகு

மூதுரை யீசா நீண்டவயசா ஓதிடுமிசுரா
முகம்மதைக் காணும் நேரம்மே—பேரீந்து கிணரும்
தளிர்த்துப் பெருகும் நீரும்மே 10

அறுசிலுரைந்த முகம்மது வேதம்ஆராய்ந்தால்ஞானம்விளங்கும்
அறிவிலுணர்ந்து தேரும்மே—எவ்வுல கொடுவுயிரும்
அகும்ம தொளிவி லாரும்மே

முடுகு

ஆவது தொழுகை அகல்வது பாவம்
போவது உயிரே சாவது சாதம்
அறிந்து அமலைச் செய்யும்மே—மதிமறந்தா
லெரிந்து நரகில் தீய்யும்மே 11

இனித்த சொற்சுவை ஆசியாமரியம் இரசூல்பிறந்திடு மிரவு
இறங்கினர் சொர்க்கம் விட்டும்மே கூறுலீன்கள் மலக்கும்
இறையோன் வசனம்மட்டும்மே—கூறுலின்கள் மலக்கும்
இறையோன் வசனம் மட்டும்மே

முடுகு

சுவர்னலோகப் பெண்கள் பிரசவம்
சொற்படி செய்துஆமி னுர்மகிழ
சுபசோ பனங்கள் சொல்லவே—சொற்ஜி பிரியில்நபியை
சொர்க்க மெடுத்துச் செல்லவே 12

பஞ்சமென்றலி மாகுணைநீங்கி
பால்க்கொடுத்தே பிழைப்பென்று பசியால் மெலிந்தவுடலம்
முகம்மது யிரசூல் பார்த்துப் பருத்தசடலம்—முகம்மது
யிரசூல் பார்த்துப் பருத்தசடலம்

முடுகு

குணையினிலலிமா மணையினில் நபியை
குலமக ளீர்கள்கூட்ட மாய்வந் தெடுத்தவர்
வியாதிக ளெல்லாமோட்ட மெடுத்த தேயவர்—வியாதிக
ளெல்லாம் ஓட்டம் யெடுத்ததே யவர் 13

இணைதுணை தெய்வம் குசையெனு மாபி யேதிவர்வேதமென்று
எதிர்த்துப் பழித்து மார்க்கம்மே தன்மனை யுரைபுத்து
யிசைத்தி சுலாத்தில் சேர்க்கும்மே—தன்மனை யுரைபுத்து
யிசைத்தி சுலாத்தில் சேர்க்கும்மே

முடுகு

எவரென வினவி யெதிர்பரதேசி நபியென அறிய
ஈந்தின் குலை யழைத்தும்மே உடும்பினுல் வேடன்—ஈமான்
கொண்டே பிழைத்தும்மே 14

பிரசங்க வித்வான் காதிர்முகம்மது
தாங்காதுபாவம் விலக்க பிர்மானந்தம் பேரின்பத்தை—புகழ்சல
வாத்தைபிர்மானந்தம் பேரின்பத்தை

முடுகு

பேதுருதுன்ப மோதுருமின்பம்
தீதுருதாழ்மை வாதுருமேன்மை
பிறந்த மனிதர் வசமாய் றூசுமீ சாக்கு நாளில்—பெரியோ
னமைத்தானிசமாய் 15

செந்திமாநகர்—என்ற மெட்டு

மதினமாநக	ரந்தனிலேவிய	
வல்லவனைத் தொழும்	வெள்ளி	நாளில்
அல்லாதனைத் தொழும்	பள்ளி	மதி
வதனமாமெழில்	கமலமாமுக	
தொழு முகம்மது	தொழுது பாத்திஹா	
மார்க்கம்துவா ஓதும்	தள்ளி	ஒற்றர்
வந்துசலாஞ் சொல்லும்	துள்ளி	1
சாமெனும் யேவா	ரந்தனில் மேவிய	
சண்டாளனும் அபா	சுபியே	வழி
கண்டனம் நாமினி	நபியே	சொல்லச்
சாரும்மே நனி	போரும்மே யினி	
யாரும் மேதுணி	வாரும்மே அணி	
சாற்றும் சகாபாக்கள்	செவியே	சண்டை
சாரும் பதுரெனும்	புவியே	2
முகாஜரீன்க	ளன்சாரிக ளேரிய	
மூதண்ட மாமெனுங்	குதிரை	கையில்
கோதண்டம் வாள்களும்	பதுரை	சேனை
மூடுமே மலை	நாடுமே பகை	
தேடுமே கொலை	சாடும்மே படை	
முந்தும் கெதிபரி	சக்பரை	யேறி
யிந்து ரசூல் சொல்லும்	தக்பிரை	3

பாதை போந்தசுகா பிசல வாத்து
பச்சி யெல்லாம் கண்டு தருகும் மரப்
பச்ச இலே கண்டு உருகும் வனம்
பாடுமே குயில் ஆடுமே மயில்
தேடுமே புரு நாடுமே கிளி
பக்கஞ் சலாம் சொல்லிக் குருகும் யெங்கள்
ஹக்கன் ரசூலென்று வருகும் 4

ஆயிரம் பெய ராகும் ரசுமானே
ஐந்து நேரம் தொழும் வள்ளல் படை
அறிந்து அபாசுபி விள்ளல் படை
அபுசகல் முத லாகு சேனே
அடங்கலுந் தருவித்திட
பதுராயின சேனையைக் கொள்ளல் இல்லே
ஆயினவே யிடந் தள்ளல் 5

மண்டுமாப்படை கண்டு முகம்மது
மக்கம் குரசிகள் சேனே நாலு
பக்கம் வளைந்திடுந் தானே கண்டு
மாலீக்குமுலுக் காகுமா மகு
பூவுசமதக தாகுமாபருல்
மகுமூது துவா செய் ஈமானே நோக்கி
வணங்கிடும்மே ரகு மானே 6

அபுசகல் அபாசுபி யான்படை ரெண்டில்
ஆக்குவ னேஜெயம் ஒன்று என்றன்
அகுமதுவே உமக்கின்று திரு
ஹக்கனே உரை பக்கமே சிறை
தக்கபேரொளி தொக்க ஜிபுரியில்
அல்லா சலாம் சொல்லி நின்று ரசூலாயத்
தறிவித்தார் நன்று 7

மூமின்சேனே முன்னூற்றுப் பதிமூணு
மூன்று அணிரசூல் நிறுத்தி துவா
யேந்தி இருகரம் பொருத்தி பதுர்
முற்றிடும் படை உற்றிடு மிடை
இற்ற ழிந்திடை வெற்றி தந்தடை
மூமினே ராமீன்சொல் வருத்தி ரசூல்
முடித்திடும் பாத்திஹா திருத்தி 8

பார்க்கு மெல்லேப்பரப் பெல்லாம் நின்றிடும்
பகைவர்களே பது ரெல்லாம் கண்டு

புகைவர்களே குபிரெல்லாம் அங்கு
பற்று பற்றென யெற்று யெற்றென
கட்டு கட்டென வெட்டு வெட்டென
பகர்வர்களே காப ரெல்லாம் படை
யெறி வர்களே கரமெல்லாம் 9

திருவுற்றிலகுகங்கை—என்ற மெட்டு

மண்ணுபுகழ் விண்ணுமகிழ் எண்ணுகமழ் நண்ணுதுகழ்
மாசிலாத மேனிவடி வாரும்மே ஞானம்
பேசு முகம்மது நபி கூறும்மே நாளும்
மங்களஞ் சிறந்த முகத் திங்களுங் கரந்தகதிர்
வானமுங் கடந்தொளிவு சேரும்மே செவியில்
வாளு முயிர்கள் சலாமுஞ் சாரும்மே 1

முத்துமயில் சித்துகுயில் நத்துபுரு எத்துகிளி
முகம்மதே சலாம் சலவாத் தோதும்மே மரம்
முந்திக்கலி மாவைச் சொல்லும்வாதும்மே அறுசில்
முன்னமே யொளிவா யிருந்திட பின்னமே
உயிர்யாவும் வந்திட முத்துருப மாயிருந்துயாதும்மே நாங்கள்
நத்துமிசு லாத்திலிமான் போதும்மே 2

கல்லுருகும் புல்லுருகுங் கண்ணுருகும் மண்ணுருகுங்
கல்புருகுந் தீனோர்பட்ட காயத்தால் பதுரில்
காபர்கட்கு வேதஞ் சொன்ன ஞாயத்தால் பதுரில்
கல்லிணைப்புக ழுற்றவர்கலி மாவிணைப் புகழுற்றவர்
கடியசண்டை செய்துநின்ற காயத்தால் பதுரில்
முடியுஞ் சொல்லிநாமேயென்றால் மாயத்தால் 3

காமக்குரோதலோப மோகமத மாச்சரியங்
காட்டுகர கங்களென்ற காதையே பகை
மூட்டு அபு ஜகலென்ற தீதையே பதுரில்
கதியிழந் தொலிதுத்துபாக் கடுந்துநின்றுமை யுக்குபா
கழருசை பத்தாறுபேரும் வாதையே தீயி
லுளருதற்குச் செத்திலாதப் பேதையே 4

நாயனேகல்பி விருத்தி நாவில் கவிமா விருத்தி
நபிமருகர் வெட்டி னகை கத்தியே காபர்
நாலுதிசையு மோடினர் கத்தியே பதுரில்
நம்புதற் கரிதாயவாளலி இம்பரில் கவிமாவினைச் சொலி
நவகெதிக்குதிரை துல்துல் சுத்தியே கதிர்
நாலுதிக்குந் துல்புக்கார்வாள் சித்தியே 5

அப்பாசு உக்காசு வென்று அம்சா இபுனுமஸ்கூதென்று
ஆறுசேனை காவலர்க ளாரும்மே பரி
யேருநாலி யார்கள்வந்து கூரும்மே விண்ணில்
அண்ட முகடும்பிளந்து யெண்டிசையு மேதுறந்து
அச்சமுற ஓசைசென்று சேரும்மே பதுரில்
உச்சரிப்பு ரெத்தங்கடல் சாரும்மே 6

தத்துரெத்தம் அத்துசதைஎத்துகுடல்மொத்துமண்டை
தாக்குரெத்தம் மூக்குவழி சாரும்மே முடி
தலைநொருங்கி மூளைநின்று சோரும்மே பதுரில்
தாக்குவர்சிலர் தூக்குவர்சிலர் தள்ளுவர்சிலர் துள்ளுவர்சிலர்
தலை யிழந்த முண்டம் நின்று சீரும்மே கண்டு
நிலையிழந்து நாயுநரி பேரும்மே 7

வெட்டுதலை யற்றஉடல் பற்றுசிரம் விட்டுயெறி
வெட்டினவ னையெறிந்து கொல்லும்மே வாளில்
வெட்டினதன் கையெடுத்து வெல்லும்மே பதுரில்
வெட்டுசிரமிலர்வெட்டுவிடுகிலர் பட்டுமொழிகிலர்வெட்டுகரமிலர்
வெல்லுதலும் கொல்லுதலுஞ் சொல்லும்மே ரெத்த
வெள்ளமும் பெருகிக்கடல் செல்லும்மே 8

மஞ்சுநிகர் குந்தள மின்னே—என்ற மெட்டு

பஞ்சகெதிப் பரியேறியே உக்காசு அன்று நிக்காது சென்று
பற்றியவாள் வெற்றி கேடகம் களம்
பாய்ந்து படைகளை சாய்ந்து குடல்தலை

தோய்ந்து உடல்களை மாய்ந்து பிணமலை
பார்த்தவிடம் ரெத்த வெள்ளம்மே
சமுத் திரம்போல் சமைத்ததுபோல்
பதுரெனுந் தலத்தை யாக்கவே 9

கண்டுசைபத் தன்றுபொங்கியே மனமுங்கண்டு சினமுங்கொண்டு
கட்கசே டகத்தைச் சுற்றவே வன்
கடியவிரைவது நொடியில் வருவது
கொடியபரிவரும் படியில் முடிகியே
கண்டு அம்சா கொண்ட கோபம்மே
ஓடுங் குதிரை சாடும் பதுரை
கருதிஅம்சா பொருதுஞ் சைபத்தை 10

ஆயுதந் தண்டை யெடுத்தும்மே
அமுசா முடியில் நிமிசம் நொடியில்
அடித்தனன்சை பத்து மூர்க்கனே தலை
அடித்த தண்டை பிடித்துமாரி அடித்திட
கேடயக்கவசமும் அற்றழிந்து முற்றுமுடிய சை
பத்தைவெட்டி மையத்தையொட்டி
ஆக்கினர்வாள் வீச்சினுயிரை 11

வண்டனெலிது கண்டகோபம்மே
அமுசா வைநோக்கி நிமிசம்மே தாக்கி
வாளும்பரியுக் தாவிவருமுன்னே வன்
வலியவாளுமே சுழலும்பரியுமே புலியினலியுமே கெலியி
னெலியுமாய் வந்துஒலிது முந்து முன்னம்மே
அலியா ரும்அன்று ஒலிதோடும் நின்று
வாங்கும் வாளை யோங்கும் முன்னமே 12

தண்டு வாள்வேல் கொண்டு கேடகம்
அலி யாருந்தட்ட ஒலீ தும் வெட்ட தாக்கு
மொலிது தலை முண்டம்மே வெட்டி
தள்ளும்மே தலை துள்ளும்மே உடல்

கொள்ளும்மே துல்துல் செல்லும்மே அலி
தாவிவருமுன் கொண்ட கோபம்மே உத்துபத்தென்னும் [13

உற்றுப்பார்த்தென்னும் தாண்டி வருமுன் தடுத்தாருபைதத்தே
தத்துகுதிரை சுத்துசாரியே
உத்து பத்தானும் உபைதத் தாரும்
தாவுஞ்சாரிப்பதுர் முழுதும்மே படை
தட்டுவர் சில வெட்டுவர்சில-தத்துவர்சில
குத்துவர்சில தாண்டி
அமுசா அலியும் வந்தும்மே
உத்துபத்தானை செத்தூரத்தானை
தலையைவெட்டி தள்ளினர் கீழே 14

மூன்றுதலைவர் கொன்ற கொலையையே அபுசகலும் அறிந்ததிலும்
மூட்டினன் சேனைக ளாரையும் படை
மூண்டிடச்சினந் தூண்டிடப் பகை-வேண்டிடச்
சன மாண்டிடப் பதுர் முகம்மது
முஸ்த்தபாவென்றும்மே ரகுமான்கலிமா சொலுந்திறமா
மூமினோரிறந்த விதமாம் 15

பொன்னுலவு சென்னிகுள—என்ற மெட்டு

கசர்த்தொழு லுகர்த்தொழு அசர்தொழு யிஸ்சாத்தொழென்று
கற்பிக்கா திருனும் இந்தச் சேதம்மே குரான்
கற்பிக்கும் ஆயத்தும் பிந்தி வேதம்மே தக்பீர்
கட்டிடுந்தொழவெட்டிங்குபிர் பட்டிடுங்கொலை விட்டிடுமுயிர்
கபீபுஅசு காபிதொழும் நீதம்மே கண்டு
கல்லுமரமும் அழுகுங் காதம்மே 1

வெட்டுகண் ரெத்தம்வடிய மற்றகண்க ணீர்வடிய
வெட்டுகையும் கட்டுதக்கு பீரும்மே தொழப்
பட்டிடாது தொங்கு காஞ் சோரும்மே பருல்
வேண்டுறக்கு தூண்டுசுஜூது மீண்டுசுஜூதுநீண்டுநின்றிடு
வேண்டிவளங்காது தொங்குந் தோரும்மே-தரைவிழுந்து
விழுந்தே யெழும்பித் தீரும்மே 2

முரிந்தகை யொடிந்தகா லெரிந்தவேல் சரிந்தகுடல்
முகம்மது சமுகம்கடந் தோங்கும்மே வழி
முரிந்தகா வினுவிருந்து தேங்கும்மே ரெத்தம்
மூடும்மே உடல் தேடும்மேதுவா நாடும்மே நபி வாடும்மேமனம்
முரிந்தகையி னுலுங்குடல் தாங்கும்மே கண்ணில்
வழிந்திடுங் கண்ணீரினுலும் நீங்கும்மே 3

தொழுத அசு காபிதலை துண்டுபட நின்றஉடல்
சொச்சமுந் தொழுதுநின்று தாழும்மே துவா
மிச்சமுங் கரம்விரித்து வீழும்மே காபர்
தூண்டிடும்படை மாண்டிடும்உதை வேண்டிடும்பரி தாண்டிடும்நடை
தொழுதஅசுகா பிதனைச் சூழும்மே குதிரை
அழுதவ ரிறந்ததென்றும் வீழும்மே 4

யாக்கரீமே யாறகிமே யாரசூலே யாநபியே
யாங்களும் பதூரில் மவுத்தா குரோம் இனிக்
காங்கும் முகம்மதை விட்டும் போகுரோம் றப்பு
யாங்கள்மகுசரில் தேங்குவேயிலினில்
ஓங்குநிழலினில் காங்கும் முகம்மதை
நீங்கிடாது சேருந்துவா கேட்குரோம் யென்று
நீட்டுகையும் காபர் வெட்டலாகு போம் 5

விலாவொடு தோளும்பிளந்து வீழுமசு காபிதொழ
வீக்கிய கட்டுங்கழண்டு மாழும்மே கரம்
தூக்கினுலும் மேகழண்டு வீழும்மே சண்டை
விட்டிடும்லுகர் பட்டிடுங்கலா உற்றிடும்பருல் கட்டிடுங்காம்
விட்டிடாம லுந்தொழுது தாழும்மே காபர்
வெட்டிடவுடல் பிளந்து வீழும்மே 6

தைத்தவாளி மொய்த்தஉடல் யெய்த்தமூமீன் வைத்தகரம்
தான்குனிந்து நின்றுதொழுந் தோரும்மே பாணம்
தைத்துதைத்து தட்டுருவச் சோரும்மே மூமீன்
தங்கமேநிறம் பங்கமேஉரம் யெங்கும்மேசதை தொங்கும்மேகாம்
தங்குதலி லாதுரெத்தம் பேரும்மே பருல்
தான்தொழுகும் முன்னேயுயிர் தீரும்மே 7

கண்டலைக்த்தையேவிடுதல் கலாவென்று யெண்ணிமூமீன்
கட்டியதக் குபீர்தலைப் துள்ளும்மே உடல்
கட்டியதக்குபீர் நிலை கொள்ளும்மே வயர்
கண்டிடுங்குடல் கொண்டிடும்நடை அண்டிடும்நபி விண்டிடும்சலாம்
காத்திடுங்கள் பெண்டுபிள்ளை தள்ளும்மே குடல்
தீத்திடும்யென் றாகையென்றும் விள்ளும்மே 8

வீழுசிரம் அல்லாவென்னும் வீழுகரம் அல்லாவென்னும்
வீழுமுரம் அல்லாவென்றும் வீழும்மே காபர்
வெட்டிடத் தொழும்ஜுஜுஆது தாழும்மே காபர்
வெட்டிடுந்தலை அற்றிடுமுடல் உற்றிடுந்தொழும் முற்றிடும்உனு
வீங்குரெத்தம் நீரோனுச்செய் மாழும்மே காபர்
வெட்டிட தக்குப்பீர் கையும் வீழும்மே 9

நின்றுநிலை கொண்டுதலை யென்றுதொழு தின்றுதலை
நிய்யத்துத் தொழுகையென்று தாழும்மே வெட்டி
மய்யத்துப் பதுரிலென்று வீழும்மே பதுர்
நின்று மலை அழுங் கண்டு பகை அழும்
ஒன்று பவமழும் வென்று விதியழும்
நீக்கிடுஞ் சண்டைதொழுது மாழும்மே தீனைப்
போக்கிடுங் காபரழுது தாழும்மே 10

இந்தவித முற்ற சண்டை தந்தமுயி ரைக்கருதா
திப்படி குபிரர்கள்முன் னேரும்மே மூமி
னெதிர்க்கமுடி யாதுநின்று சோரும்மே நபி
யீதறிந்திரசூல் நிரைந்தருள் மாறிவன்போடு கோபமென்றுள
திரண்டுகண் கடைசெவந்து கூரும்மே-மண்முரண்
டெழுந்துபூமி சத்தம் பாரும்மே 11

அவ்வலேமுன் ஆகிறுபின் பாத்தினுஉன் லாகிறுவுன்
ஆதியும் அனாதியென்ற சோதியே அறுசில்

அகும்மது முகம்மதென்ற நீதியே நாளும்
ஐம்புலன்களும் மும்மலங்களும் அற்றுநிற்மல முற்றறிய

வகத்தினி லறியும்ஹக்கென் றேதியே லவ்கில்
அர்ரகுமான் சொன்னகுரா ஞதியே 12

ஆசை இன்பம் கோபதுன்பம் தூலதூலம் தோல்விசெயம்
அத்தனையுமும் மொளிவில் கூடியே லவ்
கல்லாகுத்தாலாதாத்தில்வருந் தேடியே வரும்
அன்பியாக்களறிந்துணர்ந்திட ஆறுபீன்களகத்தறிந்திட
அவ்வலிலுமாகிரிலும் நாடியே மகுசர்
யாவருமுன் ஸபாஹத்தில் தேடியே 13

மேகநீழல் மேனிகமழ்இல்லை நிழல்இல்லைதடம்
மேனியிலெறும்புஈயும் தீண்டிடா சதா
வேண்டியும் மறதிவந்து பூண்டிடா இனிமேல்
நடந்தினிமேல்வரும்பொருள் மேவுஞாபகமாகுமாமறை
விளங்குபுருக்கானையோது மாண்டிடா மகுசர்
வேளையெனைகாக்கும் பாவம் தூண்டிடா 14

நரகமென்றுஞ் சொர்க்கமென்றும் நண்ணுதற்குச் செய்யும்அமல்
நாட்டினன் பூலோகமென்றுங் கூறும்மே குரான்
தீட்டினன்யிரசூ லென்றும் பாரும்மே கியாமம்
நாளைமகுசரில்வேளை மீசானில் நாயன்முன்னிலே நன்மைதின்மைகள்
நான்சொல்தின்மையாளியாக்கி யாரும்மே-சொர்க்கம்
தாஞ்சொல்நன்மையாளி யாக்கிச் சேரும்மே 15

வேதமிது சேதமிது வேண்டுமிது வேண்டாதீது
வென்றியீது நன்றியீதென் றெண்ணுது நாம்
விரும்புஹக்ரசூலென்று தோணுது கோபம்
வேண்டிடப் பகைதூண்டிடச்சன மாண்டிடக்காபர் மீண்டிடச்செய
வேண்டுசொர்க்கம் தான்புகுத பண்ணுது இனி
தூண்டுநரகந்தான் சேர பேணுது 16

எற்றுகலிமாவை யாவரீ மானுடனேசொலினும்
யாரசூலே யானவரைத் தீண்டிலேன் கியாமம்
எத்திடும்வரையிலும் நான் தூண்டிலேன் ரசூல்

என்றியம்புதலின்று தேம்புத லன்றுசொல்லுதல்நன் றுநன்றென
எவியெனைப் பாரும்பணி பூண்டிலேன் யினி
யேவியெனைப் பாருமென்று வேண்டினேன் 17
யீட்டுலகு மூட்டுமுரை கேட்டுரசூல் வாட்டுமென்
றிறங்கினர் குதிரைசக்ப ரெண்ணும்மே ஒரு
புறனீங்குவீ ரீசுலாம் நண்ணும்மே ஆதி
யிஸ்முயென்றிடு பிஸ்மையோதி யிரஞ்சிஹக்கையெடுத்துமண்
ணெறிந்திட முகம்மதுகை மண்ணும்மே கூடி
யெழுந்தது உலகமெங்கும் விண்ணும்மே 18

நாடுமிருள் தேடுமூதை சாடுமிடி கூடுந்தீயும்
நாலுபுற மும்வளைந்து நண்ணும்மே காப
ரேலுமோ வாளவுமென்றும் பண்ணும்மே குரான்
நாயனேஉரை யாயதீனிலே யேவுமாநபி நாயகம்பகை
நார்களேசெய் வதோவென்னும் மண்ணும்மே நீங்கள்
நரகலோகம் போவீரென்னும் விண்ணும்மே 19

எட்டுதிசை தொட்டுமலை கிட்டுகடல் முட்டுபூமி
யெங்கணும் பறந்து பதுரி லோங்கும்மே படையி
லெவர்கலிமாச் சொல்லினும்மண் தேங்கும்மே பதுரி
லேகமாகவளைந்து நின்றிருளாக வந்துநிறைந்து கூடிமண்
யேகமுடியாது வென்று வீங்கும்மே யிப்ப
யீமான்கொண்டால் விடுவேனென்றும் நீங்கும்மே 20

காதுகண்ணு வாயி நாசிக் காணுமலநீர்த்துவாரம்
காபரை யெல்லாமடைத்து விட்டது நமன்
காரிய முயிர்கள்வாங்கப் பட்டது பதுரில்
கத்திநீங்குயிர் தத்திநீங்குயிர் கவ்விநீங்குயிர் தவ்விநீங்குயிர்
கண்டவிடமெல்லாஞ் சாகப் போட்டது ரணக்
களத்தையெல்லாம் பிணத்தின்மலை யிட்டது 21

இந்தவிதங்கண்ட நபியிபுனுமைஸ்கூதையழைத்
திறந்திலன் அபுசகலும் பாரும்மே யிருந்
தாலவனைத் தானழைத்து வாரும்மே சொல்ல

யிபுனுமஸ்குதெழுந்து நல்லதுயேகுவேன் நபி நாயகம்சலாம்
யென்ற சொல்லினேடெழுந்து பேரும்மே அவ
னிருந்தவிடம் அபுசகலைத் தேரும்மே 22

கழுகுகாகம் பருந்து பந்தல் கவ்வும் நரிநாயும்பேயுங்
கண்டுஓடிடக்களத்தைத் தேடியே பிணங்
கண்டனர் அபுசகல்மேல் மூடியே கண்டு
கண்சிவந்து முருக்குமீசை கடித்தவாயு மொடித்தகால் நிலை
கண்டபுசகல்கலிமா நாடியே-சொல்வாய்
கண்டத்தை அருப்பேனல்லால் கூடியே 23

மஞ்சுநிகர் குந்தள மின்ன—என்ற மெட்டு

இலவ்குல்மஹபூ லென்னுங்கலம்மே யெழுதுங் கலம்மே தொழுகுங்
குரானே-இலாகி யால்யெழுதுஞ் சொன் ேனமே சொல்
யேவலின்ன தெனத் தெரிந்திட பாவ
மின்னதெனத் துறந்திட யேவு
மிரசூலென்றெண்ணியே அரும்மதுவை
முகம்மதுவை யீமான்கொள் ளிசுலாமாவாயே 1

சுவைஒளியூ ருேசைவாசம்மே அறிவுமில்லா உயிருமில்லா
சொரூபமே சுவாமி யென்றும்மே நீ
சுத்தபக்த்தியு மெத்த நத்தியு புத்தை
அத்தகை வைத்த பித்தனே சொல்லியும்
வணங்க லாகும்மோ அபுஜகலே-தவ்பாசெயலே
சொல்லியீமான் கொள்ளுஞ் சொர்க்கமே 2

இபுனுமஸ்கூ தென்றுகூவியே கபீபிரசூல் தவாபைநாடி
யேவியென்னைப் பாருமுன்னையே கூவி
யேவினுரினிப் பாவிநானுனே கூவி
யான்வர ஆவிவாள்வுற யெத்தினேநா னத்தியுன்னையே
இனியேன் விசனம் இனிதே வசனம்
இப்பவேனும் ஒப்புமீமானை 3

இடையகுல மடையா மஸ்கூது யெமை யிகழ்ந்து உமைப் புகழ்ந்து
இசுலாமாகி மடைய ஞையோ நபி
யேதடாயிவர் தீதடா நபி-வாதடாகுரா
ஞேதடா அது இதை யுரைத்த நாவதைத்தானே
வெறுத்துஉன்னை அறுத்துப்பின்னை
யெறிவதற்கின் னேரம் போராதே 4

அடியுமுடியு மில்லா வேதம்மே குரான் சரிபாம் புருக்கான் சரிபாம்
அல்லாஒருவன் தானும் ரசூலாம் நபி
அப்பவே சொல ஒப்பவோ இலை
இப்பவே சொல ஒப்புமோ மனம்
ஆருமிவட மில்லை யென்றும்மே
இறந்து போன தறிந்து நீயும்
அண்டிவந்து நின்று சொன்னுயோ 5

முன்னையேயா ரில்லையொன்றும்மே தொழுவதற்கு
விழுவதற்கு பின்னேபல பேருநின்றும்மே தரை
முட்டியேதலை விட்டும்மே நிலை நட்டமா
குனிந்திட்டிருந்திட முகம்மது வணக்க
மீதாகும் இணக்கமற பிணக்கம் வர
மொழிகுவது கோபமே யாகும் 6

போன்னுலவு சின்னிகுள—என்ற மெட்டு

கேட்டபுச கல்கனன்று மோட்டியையா னுங்குணத்தால்
கேட்டணையெனச் சொல்லினு னெய்தலை வெட்டி
ஒட்டினரவன் சிரசைக் கொய்தலை சொல்
கேட்டிடாதபு சகல்தலைதனை நாட்டினர்நபி நாயகமுனங்
கேட்டனர் முகம்மதவன் செய்தலை சொல்லி
காட்டினர் யிபுனுமஸ்கூத் வைதலை 1

பாவிசிரசை அகற்றி மூமினேர்களை அடக்கிப்
பாடுங்கலிமா வையித்துத் தேர்ந்தனர் பய
காம்பர்மதி ஞசிரிபு பேர்ந்தனர் செல்லும்
பாதைகூட சகாபினுடிட பாவமோடுநம் வேதம் நீடிட

பாருலகில் மாமதினை சேர்ந்தனர் பய
காம்பரசூகாபிமனே சார்ந்தனர் 2
ஆதிதரும் சோதிபெரும் நீதிவரும் ஓதிஉரும்
ஹக்கனே வணங்குதல் முகம்மது யெட்டுத்
திக்கெல்லாம் புகழுதல் முகம்மது பதுரி
லடுத்தகாப ரெடுத்தசண்டை பிடித்தபேர்க ளெடுத்ததீநிலே
யாக்கியாவ ரும்புகழ் முகம்மது பாவங்
தீர்க்கவே புகழ்காதீர் முகம்மது 3

ராமநாமமே—என்ற மெட்டு

இராகம்—கேதாரகௌளம்—தாளம்—ரூபகம்

பல்லவி

ஞான ஞானமே தவ்கீது ஞானநிலைமை
அருமறை திரு முகம்மது (ஞான)

அநுபல்லவி

காணொணாத மோனவடிவே
கலிமா வுரைத்த ஞானமுடிவே
பேரின்பம்புருக் காணின்படியே
பிசாகாது கிட்டும் சொர்க்கம் நொடியே (ஞான)

சரணம்

தருமஞ் செய்யுந் தவிரும்நரகம்
தரும்மே தொழுகை சுவர்க்கம் சரதம்
கருமந்தொலேயும் கராமாங் கிரகம்
கதியை அளிக்கும் ரமலான் விரதம் (ஞான)

சலாத்தொடுசல வாத்தைக்கூடு
சகாதத்தை சக்கராத்தில்நாடு
கலாலொடுகவ னித்துத் தேடு
கள்ளத்தொழிலேக் கண்டித்துப் போடு (ஞான)
கியாம நாளாம் கேள்வி தொழுகை
கிடைத்தால் நரகம் தினமும் அழுகை
பயமாம் ஒயிலில் கடக்க விழுகை
பழுதாம் தினமும் விடுதல் தொழுகை (ஞான)

இஸ்லாமெவர்க்கு மிரசூல் குணமாம்
இகழ்தல்பிறரை யிபுலீஸ் குணமாம்
அறபியோதிக்கெடுக்கும் பணமாம்
அசது அகத்தி லிகழுங் குணமாம் (ஞான)
மலக்கல் மவுத்தை மறந்து திரிதல்
மனதில் பொறுமை நினைத்துப் பிரிதல்
கலால் கறுமெனப் படித்துத் தெரிதல்
காதிர்முகம்மது பதத்தி லறிதல் (ஞான)

கதிரேசா முருகா எதிரே வர வேண்டும்—என்ற மெட்டு

இராகம்-பைரவி — தாளம்-ஆதி

பல்லவி

பதுரேபடை செய கதுரே வரவேண்டும்
மழைகுடை யருள்புரி கதுரே வரவேண்டும் (பதுரே)

அநுபல்லவி.

பாவலர் நாவலர் பாதலர் பூதலர்
பாவம் செலநபி நாமம் சொல டா
பாதமலர் ஓது நிதம் தூதரசூல் (பதுரே)

சரணம்

மலக்குஜின் மனிதனோடு யாவையும் வகுத்து நின்று
வெளிமகுச ரேமென்றுடி அருள் செய்வாய் சொர்க்கம்
வாஜிபாக்கி வைப்பாய் (பதுரே)
மனிதவேதமே துணியு நீதமே யினியுன் பாதமே
கனியும் போதமே மகும்மூதே முகம்மதே
ரகீம்தூதே அகும்மதே
மங்களம் பொருந்தும் அகம் திங்களும் சிறந்த முகம்
மறையிறை யருள்வழி தரைதலம் முறைதெளி (பதுரே)

அன்னை ஜானகி நாயகா — என்ற மெட்டு.

தேசிகதோடி—தாளம் —ஆதி.

சரணம்.

தேவ தெய்வீக நாயகம் தேசோம யானந்த
திருமகள் கத்சா நாயகம் லோகநாயகம் (தேவ)

திருக்கலி மாவுரைத்து சுருக்கமோட்சமே சேர்த்து
கருக்கும் பாவஞ் சலவாத்து ஓயாதுரைத்து (தேவ)
சாது சங்கத்தின் நேசம் சரிகத்து விசுவாசம்
ஓதுங் குரானையே வாசம் உற்பவநாசம் (தேவ)
காலும் தரை தோயாது கண்ணும் அருள் சாயாது
கஸ்தூரி மணம் ஓயாது துகள் வாயாது (தேவ)
ஆதிவகி தேங்காது ஆரும் சலாம் நீங்காது
ஆகுங் காரணம் வாங்காது நிழலோங்காது (தேவ)
லிவாவுல் அம்துக்கொடி நிழல்தந்து ஆளும் கொடி
அகும்மது ஹதீதின்படி யுகமும்முடி (தேவ)
தேரும் பிஸ்மனுரைத்து தெரியுஞ்ச லாமுரைத்து
கூருந்தொ மூகையுரைத்து குரானுரைத்து (தேவ)
ஹக்கன் திருமறையே மக்கர் தனிலுறையே
பக்கங்கிரா மலையையே குரானுரையே (தேவ)
அறுசிலு றைந்தஒளி வருசைக்குறசிவழி
புரிசைம தினமே அளி மகுசர்வெளி (தேவ)
கபீபு முகம்மதுவே காதிர் மும்மதுவே
ஜெகம்புகழ் அகும்மதுவே பதமுகம்மதுவே (தேவ)

மோனப்பிரகாசமான முஹையதீனே—என்ற மெட்டு.

தேசிகதோடி — அடதாளம்.

பல்லவி.

மோக்ஷ ரட்சகர் ஞான முகம்மதுவே (மோக்ஷ)

அநுபல்லவி

நானம் கமழும் பாதா நம்பினே னருள் தாதா
நாடிப்பாகதி வாடித்திரிதிதி கூடித்தருவிதி ஓடித்தருததி (மோக்ஷ)

சரணம்.

எழுபத்திரெண்டு கூட்டம் யெத்தாது சொர்க்கமென்று
யெண்ணித்துணிவது ஜன்னத்தாவது
நன்னற்பதமது சுன்னத்துருவது (மோக்ஷ)

காரணக் காட்சிகாட்டி கலிமாவை நிலைநாட்டி
கற்கும் திருமறை மக்கந் தனிலுறை
ஹக்கன்விதிமுறை சொர்க்கந் தனிலுறை (மோக்ஷ)

காணாத ரூபாரூபம் கருத்தில் ஞானமரூபம்
கற்றற்றறி பொருள் பற்றற்றறிவது
சொற்றற் றருமறை நிற்றற்றிருவருள் (மோக்ஷ)
முன்னே மானைப் பிடித்து பின்னீ மானைப்படித்து
மூமீனென்றிரு ஆமீனென்றருள்
சேமீமானென போமீ நாமென (மோக்ஷ)
வானில் மதிமுளைத்து தீனிற் கபிபழைத்து
வள்ளல் தருமறை கொள்ளலரசர்கள்
செல்லல் குபிரர்கள் யெழ்மல் நரகமே (மோக்ஷ)
கபீபூமுகம்மது நல் காதீர்முகம்மது சொல்
கருதிப்பரகதி தருமித்திருவிதி
சுருதிப்பெருநிதி வருமித்திருததி (மோக்ஷ)

இலங்குநூலும் புலியுரியாடையும்—என்ற மெட்டு

செவந்ததாமரை கரசரணிரசூல் செவிவாய்கண்
உவந்தநற்புகழ் தருவனஉடலுயிர் செவிவாய்கண்
கவந்தநடமிடு சிரமிலைபவம்வருஞ் செவிவாய்கண்
நிவந்த செயம்பதுர் நபிநினைபவமில செவிவாய்கண்
இனித்தசொற்சுவை மாகலிமாவுரை யிசையாலும்
நுனித்த கபிபரசன்கலிமாநுவல் தசையாலும்
செனித்த பல்லுயிர் பவமகல்இலாகிசெய் மிசையாலும்
தொனித்தககுபா நோக்கிநீ தொழுபருல் திசையாலே
இலங்குபிஸ்மினுரைதருநாவும் யெழில்வாயும்
துலங்குசசிமுக மரைமலர்திருமுகம்மதுவாயும்
கலங்குமுயிர்கள் அபயமதருள்கா சரணேயும்
விலங்குபுள்சலா முரைதருதொனியிரு செவிதோயும்
படர்ந்தகு பிரர்களுறைதரு திருநகர்படையாரும்
அடர்ந்தகுறசி களறபிகள்வதைபுரி அலியாரும்
தொடர்ந்தஉமருது மானிருபுடைவலம் மிடைவாரும்
கடர்ந்த அபுபக்கரெனும் முகம்மதுவுரை கடவாரே
பட்டமரமில துளிர்தழிர்மலர்கனி பழமாகும்

கெட்டகுணஞ்ஜின் மனிதர்கள்கெடுகுண விடலாகும்
துஸ்டபுலிகரடிவை அரவிவைகளுந் தொழலாகும்
வட்டதிருமுகந் திருநபிதெரிசனம் வரவாலே
ஈன்றகன்றென யெதிர்வரும்மான்மரை இனிதாகும்
தோன்றகொடிசெடிகற் கறடிவைசலாந் தொழிலாகும்
யேன்ற பறவைகளிறகுகள்நிழலெழ வரலாகும்
ஆன்றகபி பிரகூல்முகம்மதுதிரு வரலாலே
தெளித்தவேதம் திருநபிகுரானுரை தெளிவேயாம்
பளித்தகள் சிறைக்களவுபொய்கொலையிகழ் பழுதேயாம்
ஒளித்தலோபன் உதவலனொருபொருள் வழுவேயாம்
அளித்தவுலகுயிர் தொழுகையைவிடல்நர கழுவாயே
கருத்தமேகம் குடைநிழலெழமுடி கதிர்மேவும்
பொருத்த சருபந்தணிமுகம்மதுபொது வுயிரேவும்
திருத்தவருகலி மாவுரைதிருமறைகுரானேவும்
வெறுத்தகுபிரிருள் விலகிடுமெழில்தொழு திடல்யாவும்
சாதுசர்ச்சனர் சமரசநிலைபெரு மசுகாபி
ஓதுஜிபிரியில் வகிவருமனுதின மூளவாகி
தீது நீங்கிடு திருகுரானுரைதொழுந் தினமாகி
யாதுபவமொழி நபிமுகம்மதுசலவாத்தாகும்
இந்தவுலகுயிர் பிறந்திருந்தழிநிலை இலவ்காகும்
இந்தவுலகுயிர் பிறந்திருந்தழிதூவா இலையாகும்
அந்தவுலகமோடுறை குரானுரை தொழுவதுவாகும்
அந்தவுலகமோடுறை முகம்மது சலவாத்தாகும்

என தம்பாள் மதுரை மீனாட்சி - என்ற மெட்டு.

ஐந்து புலன்கள் செய்யுஞ் சேட்டை
ஞானம் அடையக் கருதும் பாட்டை
உண்டாகும் ஆசையென்னுங் காட்டை
பாவம் வரும் மூட்டை — பாவம் வரும் மூட்டை
மலக்கல் மவுத்து உயிர் வாங்கும் உடல்
மய்யத்தாகி நீங்கும் கபூரில் வந்து

உடலு வீங்கும் ளாகு நின்று தேங்கும் (ஐ)
நாயன் தொழுகை விடலாமோ உடல் நரக
நெருப்பு சுடலாமோ அஷகது கலிமாச் சொல்லி
படலாமோ—அறிவு கெடலாமோ (ஐ)
காசு பணத்தைக்கண்டு கார்ப்பாய் யெழுதி
கணக்கு போட்டுத் தீர்ப்பாய் முசாபர் கண்டா
லோடப் பார்ப்பாய் கபுசோடுனைச் சேர்ப்பாய் (ஐ)
அண்டம் புவனமென்று நாட்ட
ரகுமானறிவைக் கொடுத்து காட்ட குரானில்
அழியும்மென்று சாட்ட இது உணரமாட்ட (ஐ)
நித்தம் பகிலியெனும் பித்து கபுரில்
நினைத்து பார்த்துக் கத்து உடலை
நெருப்புதாவும் யெத்து இது உனக்குத் தத்து. (ஐ)
அருமை நாயகம் சலவாத்து
அர்ச்சென்று சுவனம் சேர்த்து நீ செய்யும்
அமலை நிரவேத்து பரமதல தாத்து (ஐ)
தவ்பாச் செய்யாத பல பாவம் மீசான்
திராசுகனக்கும் கோபம் ரகுமான்
சாற்றிச்சொல்லுஞ் சாபம் உனக்கு மனஸ்தாபம் (ஐ)
எல்லாஞ் சமரச மென்றெண்ணு குரானில்
இயம்புந்த லீலை உண்ணு உலக
பற்றிருக்குமவர்க்கு புண்ணு இதையரிந்து நண்ணு (ஐ)
அத்துவித வஸ்துவை நோக்கு
அஞ்ஞானமகத்தில் நீக்கு
சாஸ்பத அறிவை ஞானமாக்கு
மனத்தழுக்கைப் போக்கு. (ஐ)

பதுர் காட்சிப் பதம் முற்றிற்று.